செ.வெ.எண்: 36 நாள்: 12.9.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 776- மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறும் மையங்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு இணை செயலாளர் திரு.எஸ்.பழனிசாமி இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப.அவர்கள் இன்று (12.9.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று நடைபெறும் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமில் 90,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் தவணை கொரோனா தடுப்பூசி 9,53,000 நபர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய பகுதியிலும் என 707 இடங்களிலும், 61 அரசு ஆரம்ப சுகாதார மையங்களிலும், 6 அரசு மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் என மொத்தம் 776 - மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறுகிறது. கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பர்கூர் பேரூராட்சி பாரத கோவில் வளாகம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஒப்பதவாடி கிராமத்திலும், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், ஜகதாப் கிராமத்தில் நடைபெறும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் மையங்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு இணை செயலாளர் திரு.எஸ்.பழனிசாமி இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ,ப.அவர்கள் இன்று (12.9.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.மதியழகன் அவர்கள் உடனிருந்தார்.

**மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 776 மையங்களில் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம் விரிவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுவரை கொரோனா தடுப்பூசி போடாதவர்கள், இரண்டாவது தவணை போட வேண்டியவர்கள் பயனடையும் வகையில் கொரோனா தடுப்பூசி முகாம் காலை 7.00 மணி முதல் தொடர்ந்து 10 ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள வார்டு பகுதிகளிலும், ஊராட்சி மற்றும் கிராம பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி வளாகங்களிலும்,

அரசு ஆரம்ப சுகாதார மையம், அரசு மருத்துவமனைகளில் என 776 மையங்களில் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற்று வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்கனவே 9,53,000 நபர்கள் முதல் மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்தியுள்ளார்கள். அதில் 7.50 இலட்சம் நபர்கள் முதல் தவணை தடுப்பூசி செலுத்தியுள்ளார்கள். இது 18 வயதிற்கு மேற்ப்பட்ட மக்கள் தொகையில் 49 சதவிகிதமாகும். இன்று நடைபெறும் முகாமில் 90,000 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இன்று காலை 7.00 முதல் 10.00 மணி வரை 11,000 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த முகாம்களில் அரசு மருத்துவர்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனை செவிலியர்கள், தடுப்பூசி செலுத்தும் பணிகளையும், சுகாதார பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் பொதுமக்களை மையங்களுக்கு அழைத்து வரும் பணிகளையும், கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களின் விவரங்கள் ஆன்லைனில் பதிவு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மாபெரும் சிறப்பு கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்களை கண்காணிக்க மாவட்ட வருவாய் அலுவலர், ஓசூர் சார் ஆட்சியர், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், இணை இயக்குநர் (நலப்பணிகள்), துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை கண்காணித்து வருகின்றனர். தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் செல்வதற்கு 62 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக வாகனங்கள் தடுப்பூசிகள் தேவைப்படும் பட்சத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள் கட்டுபாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தவுடன், உடனடியாக தேவையான தடுப்பூசிகள் அனுப்பிவைக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி.மணிமேகலை நாகராஜ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.அசோகன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.வி.கோவிந்தன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.சே.சதீஸ்குமார், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திரு.பி.முருகன், பர்கூர் ஒன்றிய குழுத்தலைவர் திரு.கோவிந்தராஜ், அரசு மருத்துவமனை அலுவலர் மரு.செல்வி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.சிவகுமார், பர்கூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சாம்கிங்ஸ்டன், வட்டாட்சியர்கள் திரு.பிரதாப், திரு.குருநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வெங்கட்ராம் கணேசன், திருமதி.அன்னபூரணி, உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**